# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# DEPARTMENT OF INLAND REVENUE

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 2135412 / 2135413/ 2135411

E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk


முத்திரைத் தீர்வைச் சுற்றறிக்கைக் கடிதம்:: SEC/2019/01

2019.05.14

சகல மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள்

**2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டு) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம், 2018 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்படும் மதுபான விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் அல்லது போத்தலில் அடைக்கப்பட்டுள்ள கள்ளு விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் மீதான முத்திரைத் தீர்வைகளை அறவீடுசெய்து சேகரித்துச் செலுத்துதல்.**

2018 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதிய 2091/3 ஆம் இலக்க, 2018 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய 2104/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் அதன் அட்டவணையின் 4 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்படும்

(i) ஏதேனும் வெளிநாட்டு மதுபான அனுமதிப் பத்திரத்துடன் (FL) வழங்கப்படும், AFL 1, AFL 2, AFL 3 மற்றும் AFL 4 ஆகிய சாராய அனுமதிப்பதிரங்களில், ஏதேனும் சாராய அனுமதிப்பத்திரமொன்று அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்காக வழங்கப்படும் ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றைத் தவிர மதுபான விற்பனைக்கான ஏதேனும் ஒரு வியாபாரமொன்றை அல்லது வர்த்தகமொன்றைக் கொண்டு நடாத்துவதற்காக

(அ) ஏதேனும் பஞ்சாங்க வருடமொன்றுக்காக வழங்கப்பட்ட வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரமொன்றின் மீது ரூபா 20,000/- முத்திரைத் தீர்வையும்,

(ஆ) ஏதேனும் பஞ்சாங்க வருடமொன்றில் ஒரு வருடத்துக்குக் குறைந்த காலப் பகுதியில் ஏதேனும் இடமொன்றில் கொண்டு நடாத்தப்படும் மதுபான விற்பனை நிலையத்துக்கு வழங்கப்படும் வெளிநாட்டு மதுபான விற்னை அனுமதிப்பத்திரத்தைக் காலத்துக் காலம் நீடிப்புச் செய்யும் ஏதேனும் அனுமதிப்பத்திரம் ஒன்றின் மீது ரூபா. 20,000/- முத்திரை தீரவையும்,

(ii) ஏதேனும் வெளிநாட்டு மதுபான அனுமதிபத்திரத்துடன் (FL) வழங்கப்படும் AFL 1, AFL 2, AFL 3 மற்றும் AFL 4 ஆகிய சாராய அனுமதி பத்திரங்களில் ஏதேனும் சாராய அனுமதிப்பத்திரமொன்றின் மீது முத்திரைத் தீர்வை ரூபா 2,000/- அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10% ஆகியவற்றில் எது கூடியதோ அத் தொகையும்,

(iii) போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனைக்காக வழங்கப்படும் ஏதேனும் அனுமதிப்பத்திரமொன்றின் மீது முத்திரைத் தீர்வை ரூபா 2,000/- அல்லது அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10% ஆகியவற்றில் எது கூடியதோ அத் தொகையும்,

அறவிடப்பட வேண்டும் என்பதைத் தயவுடன் தெரிவிக்கின்றேன்.

02. முத்திரைத் தீர்வைகள் (விசேட ஏற்பாட்டுச்) சட்டத்தின் 7 ஆவது பிரிவுக்கமைவாக, அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வைத் தொகையை உரிய காலாண்டு முடிவடைந்து 15 (பதினைந்து) நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வை தொகையை, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வரையறுக்கப்பட்ட காசோலைகளாக இத்திணைக்களத்திற்கு அனுப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், இலங்கை வங்கியில் 4153842 என்ற இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் முத்திரைத் தீர்வைக் கணக்கில் வைப்புச் செய்து, ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய இணக்கத்திற்குட்பட்ட முத்திரைத் தீர்வை தொடர்பான கூற்றில் அவ் அனுப்புகை தொடர்பான தகவல்களைக் குறிப்பிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டுமெனவும் மிகத் தயவுடன் தெரிவிக்கின்றேன்.

நதுன் குருகே
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

Nadun Guruge
Commissioner General
Department of Inland Revenue,
Sir Chittampalam A.Gardiner Mawatha,
Colombo 02.

பிரதிகள்

1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழுத் தலைவர்
2. செயலாளர் – நிதி அமைச்சு
3. மதுவரி ஆணையாளர் நாயகம்
4. செயலாளர் –பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு